**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.53/2025 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு.ஆறுமுகம் |
| Husband/Father Name | ஆஞ்சநேயர் |
| Village /Area | கிழவணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.10.2025.

**(எதிரிகள் 3 முதல் 4 வரை ஆஜர். எதிரி 1 மற்றும் 2 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த சந்திரன் என்னுடைய அண்ணன் ஆவார். அசா.1 என்னுடைய அண்ணி ஆவார். அசா.2 என்னுடைய பெரிய அண்ணன் ஆவார். கடந்த 05.09.2024 அன்று மாலை 04.15 மணியளவில் என் அண்ணன் வேலை செய்த கூலி பணத்தை வாங்க இரு சக்கர வாகனத்தில் சென்றார். சென்று திரும்பி வரும் போது கீதாவும் அவரது மகன் ஆகாஷ் என்பவரும் அவரை மடக்கி அடித்துக் கொண்டிருந்தார்கள். என் அண்ணன் மகள் கவிதா பள்ளி விட்டு வரும் போது அடித்துக்கொண்டிருந்ததை பார்த்து எங்களிடம் வந்து நடந்ததை கூறினார்.

நாங்கள் அங்கு சென்று பார்த்த போது எத்திராஜ் வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்து என் அண்ணனை சாகடித்தது போன்று உன்னையும் சாகடிப்பேன் என்று கூறி கத்தியால் என் அண்ணன்

இடது உள்ளங்கையில் வெட்டினார். பிறகு என் அண்ணனின் தலையின் மீது வெட்டினார். என் அண்ணன் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தவுடன் சுப்பரமணி என்பவர் கல்லை எடுத்து என் அண்ணன் தலையில் மீது போட்டார். சரவணன் என்பவர் எத்திராஜீடம் கத்தியை பிடிங்கி என் தங்கை தாலி அறுத்தது போல் உன்னையும் தாலி அறுக்காமல் விடமாட்டேன் என்று கூறி என் அண்ணனின் பின்னந்தலையில் வெட்டினார். அப்போது என் அண்ணன் மயங்கி விழுந்த நிலையில் சுப்பிரமணி என்பவர் நடிக்கிறியாடா என்று கூறி கல்லை எடுத்து என் அண்ணன் தலையில் போட்டார். என் அண்ணன் இரத்த வெள்ளத்தில் விழுந்த போது ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்து திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது சம்பந்தமாக என் அண்ணி ஜோதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.17 18:17:10 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.